பிப்ரவரி 2020

விண்மீன்.காம்

# இரண்டாவது வார நடப்பு நிகழ்வுகள்

08 பிப்ரவரி – 14 பிப்ரவரி

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.முதலாவது இந்திய–ஆப்பிரிக்க பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு நடைபெற்ற நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. லக்னோ ☑**

இ. கேப் நகரம்

ஈ. நைரோபி




❖ ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும், 'DefExpo-2020' பாதுகாப்புக்கண்காட்சியின் 11ஆவது பதிப்பின் போது முதலாவது இந்திய–ஆப்பிரிக்க பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு லக்னோவில் நடைபெற்றது. ஆப்பிரிக்க நாடுகளைச்சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டாக இம்மாநாட்டில் பங்கேற்றனர். இந்த மாநாடு, லக்னோ பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. இதற்குமுன்னர், 3ஆவது இந்திய–ஆப்பிரிக்க உச்சிமாநாட்டின்போது (2015 அக்.26–30), தில்லி பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2.அண்மையில், மிஸ்டிக் கலிங்கா இலக்கிய விருதுக்கு (இந்திய & உலக மொழிகள்) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபல எழுத்தாளர் யார்?**

**அ. மனோஜ் தாஸ் ☑**

ஆ. பிரதிபா ரே

இ. சுரேந்திர மொஹந்தி

ஈ. ராமகாந்த ராத்



❖ பிப்ரவரி 8–9 வரை புவனேசுவரத்தில் நடைபெறும் 2 நாள் மிஸ்டிக் கலிங்கா விழாவின் நான்காவது பதிப்பின்போது, பிரபல ஒடிய மற்றும் ஆங்கில எழுத்தாளரான மனோஜ் தாஸ் (85) அவர்கட்கு, "மிஸ்டிக் கலிங்கா இலக்கிய விருது (இந்திய மற்றும் உலக மொழிகள்)' வழங்கப்படவுள்ளது. அண்மையில் அவருக்கு, 'பத்ம பூஷன்' விருதும் கிடைக்கப்பெற்றது. இந்தவிழாவின்போது, "தெய்வீக பித்து: அறிவு, பரவசம் மற்றும் மாற்றம்" என்ற தலைப்பில், மனோஜ் தாஸ், முக்கிய உரையை வழங்கவுள்ளார்.

**3.இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய நிதிக்கொள்கையின்படி, அடுத்த 2020–21ஆம் நிதியாண்டில், இந்தியாவின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 5 %

ஆ. 5.5 %

**இ. 6 % ☑**

ஈ. 6.5 %




❖ அடுத்த நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6% அதிகரிக்கும் என இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அண்மையில் கணித்துள்ளது. 6–6.5% என மதிப்பிட்டிருந்த பொருளாதார ஆய்வின் கணிப்பைவிடவும்

இது குறைந்த அளவாகும். இந்திய பொருளாதாரம் தொடர்ந்து பலவீனமாக உள்ளது என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

❖ 2020–21 நிதியாண்டின் முதல்பாதியில், வளர்ச்சி, 5.5–6.0 சதவீதமாகவும், மூன்றாம் காலாண்டில் 6.2 சதவீதமாகவும் இருக்கும் என RBI தெரிவித்துள்ளது. கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற நிதிக்கொள்கை கூட்டத்தில் நடப்பு நிதியாண்டில் வளர்ச்சி 5 சதவீதமாக இருக்கும் எனத் தெரிவித்திருந்தது. இந்நிலை –யில் தற்போதும், நடப்பு நிதியாண்டில் வளர்ச்சி 5 சதவீதமாக இருக்கும் எனக் கூறியுள்ளது.

**4.ஐந்தாவது இந்தியா–இரஷ்யா இராணுவ தொழிற்துறை மாநாடு நடைபெற்ற நகரம் எது?**




அ. மாஸ்கோ

ஆ. புது தில்லி

**இ. லக்னோ ☑**

ஈ. புனித பீட்டர்ஸ்பர்க்

❖ இந்தியா–இரஷ்யா இராணுவ தொழிற்துறை மாநாட்டின் ஐந்தாவது பதிப்பு அண்மையில் லக்னோவில் நடத்தப்பட்டது. இம்மாநாடு, 'DefExpo–2020'இன் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள், ரேடார் அமைப்புகள், ASW ஏவூர்தி செலுத்திகள் மற்றும் முப்பரிமாண ஒப்புருவாக்கம் உற்பத்தி தொடர்பான 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்தியா மற்றும் இரஷ்யாவைச் சேர்ந்த நிறுவனங்களிடையே கையெழுத்திடப்பட்டன. BHEL, பாரத் டைனமிக்ஸ் லிட் மற்றும் விஸ்டா கன்ட்ரோல் உள்ளிட்டவை இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட சில முக்கிய நிறுவனங்கள் ஆகும்.

**5.நாட்டில் கொடுப்பனவுகளின் டிஜிட்டல்மயமாக்கலை மதிப்பிடும் டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை வெளியிடுவதற்கென அமைக்கப்பட்டுள்ள அமைப்பு எது?**

அ. NITI ஆயோக்

ஆ. இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI)

**இ. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ☑**

ஈ. தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கம் (NASSCOM)

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது வளர்ச்சி & ஒழுங்குமுறைக்கொள்கைகள் குறித்த தனது அறிக்கையை பிப்ரவரி 2020 நிதிக்கொள்கை அறிக்கையுடன் சமீபத்தில் வெளியிட்டது. அந்த அறிக்கையில், டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை (Digital Payments Index – **DPI**) அறிமுகப்படுத்துவது குறித்து RBI அறிவித்தது.

❖ இது, நாட்டில் கொடுப்பனவுகளின் டிஜிட்டல்மயமாக்கலை மதிப்பிடும். நாட்டின் பொதுமக்களிடையே டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளின் தாக்கங்களை **DPI** துல்லியமாக அளவிடும். எதிர்வரும் 2020 ஜூலை மாதத்தில் இதனை அறிமுகம் செய்ய RBI உத்தேசித்துள்ளது.

**6.பன்னிரண்டாண்டு இடைவெளிக்குப்பிறகு நடைபெறும் 22ஆவது இந்திய சர்வதேச கடல் உணவு கண்காட்சியை நடத்தும் நகரம் எது?**

அ. விசாகப்பட்டினம்

ஆ. கோவா

**இ. கொச்சின் ☑**

ஈ. சென்னை

❖ கேரள மாநிலத்தின் கொச்சின் நகரம், 22ஆவது இந்திய சர்வதேச கடல் உணவு கண்காட்சியை சுமார் 12 ஆண்டு இடைவெளிக்குப்பிறகு நடத்துகிறது. 3 நாள் நடைபெறும் இந்தக் கடல் உணவு நிகழ்ச்சியை கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், பிப்.7 அன்று திறந்துவைத்தார். இந்நிகழ்வு, நாட்டின் கடல்சார் பொருட்கள் மற்றும் கடல் உணவுகள் துறையின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் ஒத்துழைப்புக்கான ஒரு தளத்தை வழங்கியது.

❖ 'Blue Revolution: Beyond Production to Value Addition' என்பது இக்கண்காட்சியின் கருப்பொருளாகும். கடல்சார் தயாரிப்புகள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமும் இந்திய கடலுணவுகள் ஏற்றுமதியாளர்கள் சங்கமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்தன.

**7.அண்மையில் தனது பொது சுகாதார பொறியியல், நீர்ப்பாசனம் & வெள்ளக்கட்டுப்பாட்டுத்துறையை, 'ஜல்சக்தித்துறை' எனப் பெயர்மாற்றம் செய்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. புது தில்லி

ஆ. புதுச்சேரி

**இ. ஜம்மு மற்றும் காஷ்மீர் ☑**

ஈ. சண்டிகர்

❖ துணைநிலை ஆளுநர் G C முர்முவின் தலைமையிலான நிர்வாக அவை, சமீபத்தில் ஜம்மு மற்றும் காஷ்மீரின் (J&K) பொது சுகாதார பொறியியல், நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக்கட்டுப்பாட்டுத்துறையை, 'ஜல்சக்தித்துறை' எனப் பெயர்மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்தது.

❖ ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதற்கும், 2021 டிசம்பருக்குள் ஜம்மு மற்றும் காஷ்மீர் முழுவதும் குழாய்வழி நீர் விநியோகத்தை 100% அடைவதற்கான திட்டத்திற்கும் அந்த அவை ஒப்புதல் அளித்தது. இந்தத்திட்டத்தை செயல்படுத்த ஜல் ஜீவன் திட்டத்தின் திட்ட இயக்குநரகம் அமைக்கவும் அப்போது முன்மொழியப்பட்டது. தொடக்கத்தில், J&Kஇன் 7 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**8.தற்போது நடைபெற்றுவரும், 'DefExpo–2020'இன்போது அறிமுகப்படுத்தப்பட்ட உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, 'ககந்தக் – Khagantak' எறிகணையை உருவாக்கிய நிறுவனம் எது?**

அ. பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு

ஆ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட்

**இ. JSR டைனமிக்ஸ் ☑**



ஈ. பாரத் மின்னணு நிறுவனம்

❖ தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும், 'DefExpo–2020'இன்போது, 'சுகந்தக்' என்ற எறிகணையை JSR டைனமிக்ஸ் என்ற தனியார் இந்திய நிறுவனம் அறிமுகப்படுத்தியது. 180 கி.மீ தூர தாக்குதல் வரம்பைக் கொண்டுள்ளது இந்த எறிகணை. JSR டைனமிக்ஸின் நிர்வாக இயக்குனர் ஏர் மார்ஷல் SB தியோ, 12 கி.மீ உயரத்திலிருந்து இந்த எறிகணையை விடுவிக்கும்போது, இந்த எறிகணை ஒரு வானாயுதமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

❖ இலக்குகளை அடையாளங்காண செயற்கை நுண்ணறிவுவையும் (AI) இந்த எறிகணை பெற்றுள்ளது. உள்நாட்டில் தயாரிக்கப்படும் இத்தகைய எறிகணைகள், 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்துக்கு ஊக்கமளிப்பதோடு, வெளிநாட்டு பாதுகாப்புசார் உற்பத்தியாளர்களை சார்ந்திருப்பதையும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**9.பிப்.6 அன்று அனுசரிக்கப்பட்ட நடப்பாண்டு (2020) பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான சர்வதேச நாளின் (International Day of Zero Tolerance for Female Genital Mutilation) கருப்பொருள் என்ன?**




அ. End Female Genital Mutilation

ஆ. Unleashing Youth Power ☑

இ. A Piece of Me

ஈ. Intensify Global Efforts

❖ பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான சர்வதேச நாள் ஆண்டுதோறும் பிப்ரவரி 6 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. பிறப்புறுப்பு சிதைப்பு அல்லது மருத்துவ ரீதியற்ற காரணங்களுக்காக பெண் பிறப்புறுப்பில் மாற்றங்களை மேற்கொள்வது ஆப்பிரிக்காவின் மத்திய கிழக்கு மற்றும் உலகின் பிற 30 நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

❖ கடந்த 2012ஆம் ஆண்டில், பிப்.6ஆம் தேதியை பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான சர்வதேச நாளாக ஐ.நா பொது அவை அறிவித்தது. வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இந்த நடைமுறையை முற்றாக ஒழிப்பதற்காக ஐ.நா அவை செயல்பட்டுவருகிறது.

**10.சமீபத்தில் நடுவணரசால் உருவாக்கப்பட்ட, இராமர்கோவில் கட்டுமானத்திற்கான அறக்கட்டளையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ. K K வேணுகோபால்

ஆ. K பராசரன் ☑

இ. G E வாகன்வதி

ஈ. மனிந்தர் ஆச்சார்யா

❖ 2019 நவம்பர் 9 அன்று வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள், 'இராமர் கோவில் கட்டுவதற்கென அறக்கட்டளை ஒன்று அமைக்கப்பட வேண்டும். எனவே, இந்திய அரசு இந்த அறக்கட்டளையை அமைத்துள்ளது. இந்த அறக்கட்டளைக்கு, "ஸ்ரீ இராம ஜன்மபூமி தீர்த்த க்ஷேத்ரா" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

❖ இந்தியாவின் முன்னாள் அரசுத்தலைமை வழக்குரைஞர் K பராசரன், அறக்கட்டளையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அறக்கட்டளைக்கான பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், தில்லியில் உள்ள அவரது இல்லத்திலேயே செயல்படும். மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, 'ராம ஜன்மபூமி' அறக்கட்டளையில் பதினைந்து பேர் இடம்பெறுகின்றனர். அதில், பட்டியலினத்தைச்சேர்ந்த ஒருவரும் இடம்பெறுவார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ சேலம் மாவட்டம் தலைவாசலில், 1100 ஏக்கரில் ₹1023 கோடியில் அமையும் ஆசியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவுக்கான அடிக்கல்லை, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் K பழனிசாமி நாட்டினார். இந்தப்பூங்கா அமைக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். இந்தப் பூங்கா, 3 பிரிவாக அமையும்.

❖ தமிழ்நாட்டின் காவல்துறையும் ஆக்சிஸ் வங்கியும் இணைந்து, வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் வங்கி பரிவர்த்தனையின்போதும், இணையவழி பணப்பரிவர்த்தனையின்போதும், மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு, பாதுகாப்புடன் பணப்பரிவர்த்தனையை மேற்கொள்ளும் பொருட்டு, "வாய்க்குப்போடுங்க பூட்டு" என்ற பெயரில் விழிப்புணர்வு குறும்படத்தை காவல்துறை ஆணையர் A K விஸ்வநாதன் வெளியிட்டார்.

❖ நாட்டில் முதல்முறையாக விருதுநகர் மாவட்டத்தில் கடந்த எட்டு ஆண்டுகளில் உயிரிழந்தவர்களின் ஆதார் எண்களை சேகரிக்கும் பணி தொடங்கியுள்ளது என இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) தெரிவித்துள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'தெய்பா–Dejfa' என்ற குறியீடு பெயர்கொண்ட சைபர் பாதுகாப்பு திட்டம், எந்த நாட்டைச் சார்ந்ததாகும்?**




அ. பாகிஸ்தான்

**ஆ. ஈரான் ☑**

இ. மலேசியா

ஈ. சீனா

❖ டிஜிட்டல் கோட்டை (பாரசீக மொழியில் தெய்பா) என்பது ஈரானின் இணைய பாதுகாப்புத் திட்டத்தின் பெயராகும். ஈரான் அடிக்கடி DDoS தாக்குதல்களையும் இணைய தாக்குதல்களையும் எதிர்கொள்வதால் இது, அண்மைய காலங்களில் செய்திகளில் அடிக்கடி இடம்பெற்றது. கடந்த பிப்.8 அன்று, இத்திட்டத்தால் ஒரு பெரிய DDoS தாக்குதல் தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**2.இந்தியாவின் எத்தனை பெரிய துறைமுகங்கள் தனிநபர்களால் அழைக்கப்படுகின்றன?**

அ. இரண்டு

ஆ. மூன்று

**இ. நான்கு ☑**

ஈ. ஐந்து

❖ இந்தியாவில் மொத்தம் 12 முக்கிய துறைமுகங்கள் உள்ளன. அவை, தீனதயாள் துறைமுகம், பாரதீப் துறைமுகம், ஜவஹர்லால் நேரு துறைமுகம், மும்பை துறைமுகம், விசாகப்பட்டினம் துறைமுகம், சென்னை துறைமுகம், கொல்கத்தா துறைமுகம், புதிய மங்களூரு துறைமுகம், வ. உ சிதம்பரனார் துறைமுகம், காமராஜர் துறைமுகம், கொச்சின் துறைமுகம், மர்மகோவா துறைமுகம்.

❖ இவற்றில், தீனதயாள் துறைமுகம் (முந்தைய பெயர் கண்ட்லா துறைமுகம்), ஜவஹர்லால் நேரு துறைமுகம் (முந்தைய பெயர் நவ சேவா துறைமுகம்), வ.உ சிதம்பரனார் (முந்தைய பெயர் தூத்துக்குடி துறைமுகம்) மற்றும் காமராஜர் (முந்தைய பெயர் எண்ணூர் துறைமுகம்) ஆகிய துறைமுகங்கள் தனிநபர்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன.

**3.சில நேரங்களில் செய்திகளில் காணப்படும், "SPICe" என்ற சொல், பின்வரும் எந்தத் துறையுடன் தொடர்புடையது?**



அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

ஆ. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**இ. வணிகம் மற்றும் பொருளாதாரம் ☑**

ஈ. பாதுகாப்பு மற்றும் ஆயுதங்கள் உற்பத்தி

❖ மத்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது தற்போதுள்ள SPICe (Simplified Proforma for Incorporating Company electronically) படிவத்தை, SPICe+ என்ற புதிய வலைத்தள படிவத்தைக் கொண்டு மாற்றவுள்ளது. பெயர், நிறுவன ஒருங்கிணைப்பு, DIN ஒதுக்கீடு மற்றும் PAN அல்லது TAN ஆகியவற்றை விண்ணப்பிப்பதற்காக தற்போதுள்ள படிவம் பயன்படுத்தப்படுகிறது. இந்தப்படிவம் அதன் புதிய வடிவத்தில், 3 மத்திய அரசு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் 10 சேவைகளை வழங்கும்.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "Batterygate" என்ற சொல், பின்வரும் எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் தொடர்புடையது?**

அ. கூகிள்

ஆ. சாம்சங்

**இ. ஆப்பிள் ☑**

ஈ. மைக்ரோசாப்ட்



❖ "Batterygate" என்பது ஆப்பிள் ஐபோனின் பழைய திறன்பேசிகளில், செயல்திறன் கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதைக் குறிக்கின்றது. இது, தரங்குறைந்த மின்கலங்களில் (battery) அமைப்பு நிலைத் தன்மையைக் (system stability) காக்கின்றது.

**5.அண்டார்டிகா தீபகற்பத்தில் உள்ள எஸ்பெரான்சா ஆய்வுமையம், சமீபத்தில் 18.3℃ வெப்பநிலையை அடைந்தது. இது, இதுவரை அண்டார்டிகா கண்டத்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலையாக அமைந்தது. எஸ்பெரான்சா தளம் என்பது அண்டார்டிகாவில் அமைந்துள்ள எந்த நாட்டின் ஆராய்ச்சி நிலையமாகும்?**

அ. பிரான்ஸ்

ஆ. போர்ச்சுகல்

**இ. அர்ஜென்டினா ☑**

ஈ. இங்கிலாந்து



❖ எஸ்பெரான்சா ஆய்வுமையம் (Esperanza Base (Hope Base)) என்பது அண்டார்டிகாவில் அமைந்துள்ள டிரினிட்டி தீபகற்பத்தின் ஹோப் விரிகுடாவில் அமைந்துள்ள ஆண்டு முழுவதும் இயங்கும் ஒரு நிரந்தர அர்ஜென்டின ஆராய்ச்சி நிலையமாகும்.

**6.உத்தரபிரதேசத்தில் உள்ள சீர் கோவர்தன்பூர் என்பது எந்த ஆன்மிகத்துறவியின் பிறப்பிடமாகும்?**

அ. கபீர்

ஆ. தாது


**இ. ரவிதாஸ் ☑**

ஈ. ராமானந்த்



❖ ரவிதாஸ் என்பவர் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு துறவியும் வட இந்தியாவில் பிரபலமாக இருந்த பக்தி மார்க்கத்தின் நிறுவனரும் ஆவார். இவர் பனராசுக்கு அருகிலுள்ள சீர் கோவர்தன்பூரில் பிறந்தார்.

**7.கொரோனா வைரஸ் அச்சங்களை அடுத்து, பால்டிக் உலர் குறியீடானது எப்போதும் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளது. பால்டிக் உலர் குறியீட்டால் கண்காணிக்கப்படுவது எது?**



அ. கச்சா எண்ணெய் விலைகள்

**ஆ. சரக்கு விகிதங்கள் ☑**

இ. சுற்றுலாப்பயணிகளின் வருகை

ஈ. பன்னாட்டு வானூர்திகள்

❖ உலகின் மிகப்பெரிய சரக்குக்கப்பலுக்கான சரக்கு விகிதங்களைக் கண்காணிக்கும் பால்டிக் உலர் குறியீடு (Baltic Dry Index), அண்மையில், கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக இதுவரை இல்லாத அளவுக்கு அதலபாதாளத்தில் மூழ்கியது.

**8.2020 பிப்.8 அன்று, தைப்பூசத் திருவிழாவை உலகம் முழுவதுமுள்ள தமிழ்ச்சமூகம் கொண்டாடியது. எந்த இறையின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் இந்தத் திருவிழா கொண்டாடப்படுகிறது?**



அ. சிவபெருமான்

**ஆ. முருகப்பெருமான் ☑**

இ. பராசக்தி

ஈ. கொற்றவை

❖ தைப்பூசம் என்பது தமிழ்த்திங்களான தையில் வரும் முழுநிலவு நாளன்று, புவியெங்கும் பரவிவாழும் தமிழ்ச்சமூகத்தால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் ஒரு திருவிழாவாகும். இது பொதுவாக, பூச நட்சத்திரம் அமையப்பெற்ற ஒரு நன்னாளில் கொண்டாடப்படுகிறது. இந்த விழா, ஐவகை நிலத்தில் முதன்மையானதாக இருக்கும் குறிஞ்சி நிலத்தின் தலைவர் திருமுருகப்பெருமானின் பிறந்தநாளாகும்.

**9. *Alternaria brassicae* என்ற பூஞ்சை காரணமாக ஆபத்தை எதிர்கொள்ளும் இந்திய பயிர்வகை எது?**



அ. அரிசி

ஆ. கோதுமை

**இ. கடுகு ☑**

ஈ. கரும்பு

❖ *Alternaria brassicae* என்பது கடுகு மற்றும் கைநோலா பயிர்களில் ஏற்படும் கருகல் நோய்க்குக் காரணமான ஒரு பூஞ்சை வகையாகும். நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இந்தப்பூஞ்சையால் பாதிக்கப்பட்ட ஒரு வயலில், சுமார் 47 சதவீதம் வரை மகசூல் குறையும்.

**10.எந்த ஹாலிவுட் நடிகர் தனது வரவிருக்கும் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படத்தில் Dr.கலாமின் வேடத்தில் நடித்து வருகிறார்?**



அ. நுவீன் ஆண்ட்ரூஸ்

ஆ. மைக்கேல் C. ஹால்

**இ. முஹம்மது அலி ☑**

ஈ. டெர்ரி ஓ க்வின்

❖ ஹாலிவுட் நடிகர் முஹம்மது அலி தனது வரவிருக்கும் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படத்தில் Dr.கலாமின் வேடத்தில் நடித்து வருகிறார். இந்தப்படம், ஹாலிவுட் தயாரிப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுவர்ணா பப்பு, ஹாலிவுட் இயக்குநர் ஜகதீஷ் தானேட்டி மற்றும் ஹாலிவுட் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் ஜானி மார்ட்டின் ஆகியோரின் கூட்டுத் தயாரிப்பு ஆகும்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் கரூர் ஆகிய எட்டு மாவட்டங்களை காவிரி டெல்டா பகுதியின் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலங்களாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக சிறப்புச்சட்டமொன்று இயற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.மானியவிலையில் உணவுப்பண்டங்களை வழங்குவதற்காக, 'குடும்பஶ்ரீ' எனப்படும் உணவகங்களை நிறுவுவதற்கான முயற்சியைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. தெலுங்கானா

**ஈ. கேரளா ☑**

❖ கேரள மாநில அரசானது அண்மையில், 'குடும்பஶ்ரீ' உணவகங்கள் எனப்படும் மானியவிலையில் உணவுப்பண்டங்களை வழங்கும் உணவகங்களை நிறுவுவதற்கான திட்டத்தை வெளியிட்டது. மாநில பட்ஜெட்டை அறிவிப்புசெய்யும்போது இதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டது. 1034 உள்ளாட்சி அமைப்புகளில், ஒவ்வொன்றிலும் இவ்வகையான உணவகங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில், ₹25 என்ற மானியவிலையில் கேரள உணவுகள் கிடைக்கப்பெறும். 'குடும்பஶ்ரீ' என்பது கேரள மாநில அரசின் வறுமை ஒழிப்பு மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் திட்டமாகும்.

**2.இந்தியாவில் எந்த மெட்ரோ இரயில் சேவை, நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ இரயில் வலையமைப்பாக மாறியுள்ளது?**

அ. தில்லி மெட்ரோ

ஆ. கொச்சி மெட்ரோ

**இ. ஹைதராபாத் மெட்ரோ ☑**

ஈ. சென்னை மெட்ரோ

❖ ஹைதராபாத் மற்றும் அதன் சகோதரி நகரமான செகந்திராபாத் இடையே ஹைதராபாத் மெட்ரோவின் விரிவுபடுத்தப்பட்ட சேவையை தெலுங்கானா முதலமைச்சர் அண்மையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதன்மூலம், தில்லி மெட்ரோ இரயில் சேவைக்குப்பிறகு ஹைதராபாத் மெட்ரோ இரயில் சேவை நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ இரயில் வலையமைப்பாக மாறியுள்ளது.

❖ ₹20,000 கோடி மதிப்பில், பொது–தனியார் கூட்டாண்மை முறையில் கட்டமைக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய மெட்ரோ இரயில் திட்டமாகவும் ஹைதராபாத் மெட்ரோ இரயில் திட்டம் உள்ளது. இதனை லார்சன் & டூப்ரோ நிறுவனம் கட்டமைத்துள்ளது.

**3.அண்மையச் செய்திகளில் இடம்பெற்ற அனூப் மிஸ்ரா வகிக்கும் பணி என்ன?**

அ. அரசியல்வாதி

**ஆ. இராணுவப்படைத்தலைவர் ☑**

இ. விளையாட்டு வீரர்

ஈ. இசைக்கலைஞர்



- ❖ இந்திய இராணுவத்தில் படைத்தலைவராக பணிபுரிபவர் அனூப் மிஸ்ரா. பொறியியல் பட்டதாரியான இவர், லக்னோவில் உள்ள இராணுவக் கல்லூரியிலும் பகுதிநேரமாக பணியாற்றி வருகிறார். மேலும், இராணுவ வீரர்களுக்கு பயன்படக்கூடிய உபகரணங்களை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகளிலும் அவர் தனது பங்களிப்பை அளித்துவருகிறார். அவ்வகையில், 'ஸ்னைப்பர்' இரக துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்க முடியாத கவச உடையை கடந்த ஆண்டு அனூப் மிஸ்ரா தயாரித்திருந்தார்.

- ❖ இந்நிலையில், AK 47 இரக துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்க முடியாத தலைக்கவசத்தினை அனூப் மிஸ்ரா அண்மையில் தயாரித்துள்ளார். இது, உலக அளவில் முதல் குண்டு துளைக்காத தலைக் கவசம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இந்திய இராணுவத்தின் இராணுவ பொறியியல் கல்லூரி ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து, 'பார்த் – Parth' என்னும் இந்தியாவின் முதல் மற்றும் உலகின் மலிவான துப்பாக்கிச் சூடு இருப்பிடங்காட்டியை உருவாக்கியுள்ளது. இதால், 400 மீட்டர் தொலைவிலுள்ள குண்டுகளைக் கண்டுபிடிக்க இயலும்.

**4.ஏழைக்குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு ₹6000 நிதியுதவி வழங்கும், "முதலமைச்சர் பரிவார் சம்ரிதி யோஜனா" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. ஒடிசா

**ஆ. ஹரியானா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. பஞ்சாப்

- ❖ ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால், சமீபத்தில், "முதலமைச்சர் பரிவார் சம்ரிதி யோஜனா"வை அறிமுகப்படுத்தினார். இந்தத்திட்டத்தின்கீழ், ஆண்டுவருமானம் ₹1.80 இலட்சம் வரையிலும் மற்றும் 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்திருக்கும் ஏழைக்குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு ₹6000 நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

- ❖ மத்திய அரசின் பல்வேறு நலத்திட்டங்களுக்கான காப்பீட்டுத் தொகைகள், ஓய்வூதியத் திட்டம் மற்றும் பயிர்க்காப்பீடு ஆகியவை, தாமாகவே, தேவைப்படும் குடும்பங்களின் வங்கிக்கணக்குகளுக்கு செலுத்த –ப்படுவதை இது உறுதிசெய்கிறது.

**5.அருண்–III என்பது இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்டுவரும் எந்த நாட்டின் நீர்மின் திட்டமாகும்?**

அ. இலங்கை

ஆ. வங்கதேசம்

**இ. நேபாளம் ☑**

ஈ. பூடான்



- ❖ அருண்–III என்னும் நேபாளத்தின் மிகப்பெரிய நீர்மின் திட்டத்துக்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் நேபாளமும் அண்மையில் கையெழுத்திட்டன. 900 MW நீர்மின்னுற்பத்தித் திறன்கொண்ட இத்திட்டம் நேபாளத்தில் கட்டுமானத்தில் உள்ளது. இதற்கான மொத்தா செலவு $1.04 மில்லியன் டாலராகும்.

❖ இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்படவுள்ள இத்திட்டம் 5 ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ளது. இதை இந்திய அரசு மற்றும் ஹிமாச்சல பிரதேச மாநில அரசின் கூட்டு நிறுவனமான சத்லுஜ் ஜல் வித்யுத் நிகாம் அருண்–III மின் மேம்பாட்டு நிறுவனம் கட்டி வருகிறது.

**6.எம்மாநிலத்தின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சமீபத்தில், மின்னாளுகை 2019–20ஆம் ஆண்டுக்கான தேசிய விருதைப் பெற்றது?**

அ. ஒடிசா

ஆ. கேரளா

இ. தெலுங்கானா

**ஈ. ஆந்திர பிரதேசம் ☑**

❖ மும்பையில் நடைபெற்ற மின்னாளுகை தொடர்பான 23ஆவது தேசிய மாநாட்டின்போது, ஆந்திர பிரதேச மாநில அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அதன் நிகழ்நேர மாசு கண்காணிப்பு அமைப்பு (Real –Time Pollution Monitoring System) திட்டத்திற்காக மின்னாளுகைக்கான 2019–20ஆம் ஆண்டுக்கான தேசிய விருதைப்பெற்றது. RTPMS திட்டத்தின்கீழ், ஒரு தொழிற்சாலை குறிப்பிட்ட மாசளவை மீறினால், அது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எச்சரிக்கையாக அனுப்பப்படும்.

**7.மனித–விலங்கு மோதலைச் சமாளிப்பதற்காக யானைகளை வேட்டையாடுவதற்கான உரிமங்களை ஏலம்விட்ட நாடு எது?**



அ. ஜிம்பாப்வே

ஆ. நமீபியா

**இ. போட்ஸ்வானா ☑**

ஈ. மொசாம்பிக்

❖ தென்னாப்பிரிக்க நாடான போட்ஸ்வானாவில் உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான யானைகள் உள்ளன. அண்மையில், மனித–விலங்கு மோதலைச் சமாளிப்பதற்காக வேழங்களை வேட்டையாடுவ –தற்கான உரிமங்களை ஏலம்விட்டதால் இந்நாடு செய்திகளில் இடம்பெற்றது. நாட்டின் தலைநகரான கபோரோனில், எழுபது யானைகளை வேட்டையாடுவதற்கான உரிமங்கள் ஏலம்விடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஐந்து ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த வனவுயிரிகளை வேட்டையாடுவதற்கான தடையை போட்ஸ்வானா அரசாங்கம் நீக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**8.அண்மையில், இந்திய குடியரசுத்துணைத்தலைவரால் வெளியிடப்பட்ட, 'A Child of Destiny' என்ற நூல் எந்த இந்திய கல்வியாளரின் தன்வரலாறு ஆகும்?**




**அ. K இராமகிருஷ்ண ராவ் ☑**

ஆ. கிரிஷ்வர் மிஸ்ரா

இ. அமித் ஆபிரகாம்

ஈ. தேவேந்திர சிங்

- புகழ்பெற்ற இந்திய தத்துவஞானியும் கல்வியாளருமான பேராசிரியர் K இராமகிருஷ்ண ராவ், 'A Child of Destiny: An Autobiography' என்ற தலைப்பில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார். இதனை, விசாகப்பட்டினத்தில் வைத்து இந்திய குடியரசுத்துணைத்தலைவர் M வெங்கையா வெளியிட்டார். GITAM பல்கலையின் துணைவேந்தரும் பேராசிரியருமான இவர், மதிப்புமிக்க, 'பத்மஸ்ரீ' விருதைப் பெற்றுள்ளார். இந்திய தத்துவ ஆராய்ச்சிக்கழகத்தின் தேசிய பெல்லோசிப்பும் அவருக்கு வழங்கப்பட்டது.

**9.தானி ஓட்டுநர்களின் அடையாளத்தை சரிபார்ப்பதற்காக, எந்த நகரத்தின் காவல்துறை, அண்மையில், 'ஆபரேஷன் நகைல் – Operation Nakail' என்ற முயற்சியைத் தொடங்கியது?**



அ. மும்பை

**ஆ. காசியாபாத் ☑**

இ. ஹைதராபாத்

ஈ. லக்னோ

- காசியாபாத் நகர தானி (auto) ஓட்டுநர்களின் அடையாளத்தை சரிபார்ப்பதற்காக, அந்நகரத்தின் காவல் துறை அண்மையில், 'ஆபரேஷன் நகைல்' என்றவொன்றை அறிமுகப்படுத்தியது. இம்முயற்சியின்கீழ், நகரத்தில் ஓடும் ஒவ்வொரு தானிக்கும் ஒரு தனித்துவமான 4 இலக்க எண் ஒதுக்கப்படும். தானியின் உரிமையாளர், தானியில் தானி எண், அவரது பெயர் மற்றும் அவரது அலைபேசி எண் ஆகியவற்றை தெளிவாக அடையாளங்காண எளிதாக இருக்கும் வகையில் எழுதியிருத்தல் வேண்டும். தானிகளில் பல்வேறு குற்றங்கள் நடப்பதாகக் கூறப்பட்டதையடுத்து, இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

**10.எந்த அமைப்பு / அமைச்சகத்தால், அண்மையில், நகராட்சி செயல்திறன் குறியீடு தொடங்கப்பட்டது?**

அ. NITI ஆயோக்

**ஆ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

Ministry of Housing and Urban Affairs
Government of India

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. தேசிய மேம்பாட்டுக் கழகம்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது அண்மையில், எளிதாக வாழ்க்கை நடத்துவதற்கான குறியீடு (Ease of Living Index) மற்றும் நகராட்சி செயல்திறன் குறியீடு (Municipal Performance Index) 2019 என்ற 2 மதிப்பீட்டு கட்டமைப்பை வெளியிட்டது. இவ்விரண்டு குறியீடுகளும், பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகைகொண்ட 100 பொலிவுறு நகரங்கள் மற்றும் 14 பிற நகரங்களில் குடிமக்களின் வாழ்க்கைத்தரத்தை மதிப்பிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- சேவை, நிதி, திட்டமிடல், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம் ஆகிய 5 அளவுருக்களின் அடிப்படையில் நகராட்சிகளின் செயல்திறனை MPI மதிப்பிடுகிறது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. 13ஆவது ஐ.நா. புலம்பெயர் உயிரினங்களின் பாதுகாப்பு–2020 (UN Convention on the Conservation of Migratory Species) (COP 13) குறித்த மாநாட்டை நடத்தவுள்ள நகரம் எது?**




அ. மும்பை

ஆ. மாட்ரிட்

**இ. காந்திநகர் ☑**

ஈ. டோக்கியோ

❖ நடப்பாண்டில் (2020) இந்தியா நடத்தவுள்ள 13ஆவது ஐ.நா. புலம்பெயர் உயிரினங்களின் பாதுகாப்பு குறித்த மாநாடு (COP 13) வரும் பிப்.15–22 வரை குஜராத் மாநிலம் காந்திநகரில் நடைபெறவுள்ளது. இவ்வுச்சிமாநாட்டை பிரதமர் மோடி திறந்துவைப்பார் எனச் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. "Migratory species connect the planet and we welcome them home" என்பது நடப்பாண்டில் (2020) நடைபெறும் இவ்வுச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்.

**2. அண்மையில், இந்திய உச்சநீதிமன்றமானது பட்டியல் சாதியினர், பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்தச் சட்டத்தை உறுதி செய்தது. 1989ஆம் ஆண்டின் இச்சட்டம், முதன்முறையாக எப்போது திருத்தப்பட்டது?**



அ. 2016

ஆ. 2017


**இ. 2018 ☑**

ஈ. 2019

❖ பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினரை வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்பதற்காக கடந்த 1989ஆம் ஆண்டில், பட்டியல் சாதியினர் & பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் நிறைவேற்றப்பட்டது. கடந்த 2018 மார்ச்சில், உச்சநீதிமன்றம் இந்தச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்தது; மேலும் அது, வன்கொடுமை வழக்கில் கைதானவர்களுக்கு முன்பிணையும் வழங்கியது.

❖ பேரெதிர்ப்பிற்குப்பிறகு, அரசாங்கம் அந்த அசல் சட்டத்தைத்திருத்தி, SC & ST (வன்கொடுமைத் தடுப்பு) திருத்த சட்டம், 2018ஐ நிறைவேற்றியது. இந்தத் திருத்தத்தை உச்சநீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

**3. சிறந்த ஆவணப்படத்திற்கான ஆஸ்கர் விருதைவென்ற, 'அமெரிக்கன் பேக்டரி' திரைப்படத்தைத் தயாரித்த பிரபல அமெரிக்க ஆளுமை யார்?**




அ. டொனால்ட் டிரம்ப்

**ஆ. பராக் ஒபாமா ☑**

இ. ஹிலாரி கிளிண்டன்

ஈ. டைகர் உட்ஸ்

❖ அண்மையில், சிறந்த ஆவணப்படத்திற்கான ஆஸ்கர் விருது, 'அமெரிக்கன் பேக்டரி' என்ற படத்திற்கு வழங்கப்பட்டது. பராக் ஒபாமா மற்றும் மிச்சேல் ஒபாமாவின் தயாரிப்பு நிறுவனமான, 'Higher Ground' வெளியிட்ட முதல் ஆவணப்படமாகும் இது. இந்த ஆவணப்படம், 'Netflix' தளத்தில் வெளியிடப்பட்டது.

❖ ஒரு சீன முதலீட்டாளரால் நடத்தப்படும் ஓஹியோ ஆட்டோ கண்ணாடி தொழிற்சாலையைப்பற்றியது இந்தத் திரைப்படம். தொழிலாளர்களின் உரிமைகள், உலகமயமாக்கல் மற்றும் தன்னியக்கமாக்கல் போன்ற பல்வேறு உலகளாவிய பிரச்சனைகள் குறித்து இப்படத்தில் கூறப்பட்டுள்ளன.

**4.ஐ.நா. புலம்பெயர்ந்த உயிரினங்களின் பாதுகாப்பு குறித்த மாநாட்டுக்கான (COP 13) சின்னம் எது?**

**அ. கானமயில் ☑**

ஆ. வெண் வயிற்று நாரை

இ. வன ஆந்தை

ஈ. வரகுக்கோழி




❖ ஐ.நா. புலம்பெயர் உயிரினங்களின் பாதுகாப்பு குறித்த மாநாட்டின் (COP 13) சின்னமாக கானமயில் (Great Indian Bustard) அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின்கீழ், ஆசிய யானை, கானமயில் மற்றும் வங்கக்கோழி ஆகிய மூன்று உயிரினங்களை, 'அழிவின் விளிம்பிலிருக்கும் அச்சுறுத்தலுக்குள்ளான புலம்பெயர் இனங்கள்' பட்டியலில் சேர்க்க இந்தியா அண்மையில் முன்மொழிந்தது. பறவையினங்கள் மற்றும் அவற்றின் சூழலமைப்புகளைப் பாதுகாப்பதற்காக சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், அண்மையில், தொலைநோக்குப் பார்வை திட்டத்தை (2020–2030) வெளியிட்டது.

**5. 'அஜயா வாரியர்' என்பது இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையே நடத்தப்படும் கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?**

அ. ஜப்பான்

**ஆ. ஐக்கியப் பேரரசு (UK) ☑**

இ. இஸ்ரேல்

ஈ. பிரான்ஸ்



❖ 'அஜயா வாரியர்' என்னும் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் (UK) இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியின் ஐந்தாவது பதிப்பு, பிரிட்டனின் சாலிஸ்பரி சமவெளியில் நடத்தப்படவுள்ளது. இந்தப்பயிற்சி வரும் பிப்ரவரி 13–26 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் பிரிட்டன் இராணுவத்தைச் சேர்ந்த தலா 120 வீரர்கள் இப்பயிற்சியில் பங்கேற்பார்கள். இக்கூட்டு இராணுவப்பயிற்சி, பிரிட்டனிலும் இந்தியாவிலும் மாறி மாறி நடத்தப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து இந்தப் பயிற்சி நடைபெறுகிறது.

**6.மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறன் குறித்து பொதுத்துறை நிறுவனங்கள் ஆய்வை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**



அ. நிதி அமைச்சகம்


ஆ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம்

இ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

**ஈ. கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சகம் ☑**

- ❖ மத்திய கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்கள் துறை, மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறன் குறித்து ஆண்டுதோறும் பொதுத்துறை நிறுவனங்கள் குறித்த ஆய்வறிக்கையை வெளியிடுகிறது.
- ❖ அண்மையில், கடந்த 2018–19ஆம் ஆண்டுக்கான பொதுத்துறை நிறுவனங்கள் குறித்த ஆய்வறிக்கை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டது. அதில், BSNL, ஏர் இந்தியா (AI) மற்றும் MTNL ஆகியவை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மிக அதிக இழப்பை ஏற்படுத்தும் பொதுத்துறை நிறுவனங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகம் (ONGC), இந்தியன் ஆயில் நிறுவனம் & NTPC ஆகியவை முதல் 3 இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களாக உள்ளன.

**7.அண்மையில், மாணாக்கருக்காக, 'படித்தல் திட்டம்' என்றவொன்றைத் தொடங்கிய மாநில அரசு எது?**



அ. ஒடிசா

ஆ. கேரளா

**இ. ஹரியானா ☑**

ஈ. மேற்கு வங்கம்

- ❖ ஹரியானா மாநில அரசு, 'படித்தல் திட்டம் – ஹரியானா' என்றவொரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இளம் மாணாக்கரிடையே வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், மத்திய அரசால் தொடங்கப்பட்ட, 'படித்தல் திட்டம் – 2022'ஐ ஒத்துள்ளது.

**8.உலக பருப்பு நாள் (World Pulses Day) கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**



அ. பிப்ரவரி 8

ஆ. பிப்ரவரி 9

**இ. பிப்ரவரி 10 ☑**

ஈ. பிப்ரவரி 11

- ❖ கடந்த 2019ஆம் ஆண்டில், ஐ.நா. பொது அவையானது பிப்ரவரி 10ஆம் தேதியை உலக பருப்பு நாளாக அறிவித்தது. இதைத்தொடர்ந்து, உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தலைமையில், உலகெங்கிலும் உள்ள பருப்பு வகைகளின் சர்வதேச ஆண்டாக கடந்த 2016ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. பருப்பு வகைகளின் ஊட்டச்சத்து மதிப்புகள் மற்றும் பருப்பு வகைகள்மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை கையாளும் வழிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

**9.சமீபத்தில், 'நிலக்கரிச்சுரங்கங்களுக்கு நட்சத்திர மதிப்பீடு' தரும் வலைத்தளத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**



அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. நிலக்கரி அமைச்சகம் ☑**

இ. சுரங்க அமைச்சகம்

ஈ. புவி அறிவியல் அமைச்சகம்

❖ 'நிலக்கரிச் சுரங்கங்களுக்கு நட்சத்திர மதிப்பீடு' வழங்குவதற்காக, மத்திய நிலக்கரி அமைச்சகமானது அண்மையில், ஒரு வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியது. இந்த வலைத்தளத்தின்கீழ், நாடு முழுவதும் உள்ள அனைத்து செயல்பாட்டில் உள்ள நிலக்கரிச்சுரங்கங்களும் சுயமதிப்பீடு செய்யப்படும்.

❖ சுரங்கங்கள், நிலக்கரி அமைச்சகத்தின் துணை அலுவலகமான நிலக்கரி கட்டுப்பாட்டாளர் அமைப்பு மூலம் சரிபார்க்கப்படும். தளத்தில் உள்ள பொறிமுறையானது, சுரங்கங்களுக்கு, 7 தொகுதிகளின்கீழ் சில மதிப்பீட்டு அளவுருக்கள்கொண்ட நட்சத்திர மதிப்பீட்டை (star rating) வழங்கும்.

**10. 'சியாரா' புயல், அண்மையில், எந்தக் கண்டத்தில் உள்ள நாடுகளைத் தாக்கியது?**

அ. ஆசியா

**ஆ. ஐரோப்பா ☑**



இ. ஆஸ்திரேலியா

ஈ. வட அமெரிக்கா

❖ ஐரோப்பிய நாடுகளில் வீசிவரும் சியாரா புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிச்சர்லாந்து மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் சியாரா புயல் கடும்பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஐரிஷ் வானிலை மையத்தால், 'சியாரா – Ciara' என அழைக்கப்பட்ட இப்புயல், ஜெர்மனியில், 'சபின் – Sabine' என அழைக்கப்படுகிறது. வெள்ள எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு, நாடுகளுக்கிடையேயான வானூர்திசேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) தயாரித்திருக்கும், "தமிழ்நாட்டுக்கான வளஞ்சார்ந்த மாநில அறிக்கை 2020–21"ஐ தமிழ்நாடு அரசின் தலைமைச்செயலாளர் K சண்முகம் வெளியிட்டார். அதனடிப்படையில், தமிழ்நாட்டுக்கு 2020–21ஆம் ஆண்டுக்கான NABARDஇன் கடன் மதிப்பீடு ₹2,45,629 கோடியாக உள்ளது. இது, 2019–20ஆம் ஆண்டுக்கான (₹2,26,906 கோடி) மதிப்பீட்டைவிட 8.25% அதிகமாகும். இதில், விவசாயத்துறைக்குக் கடன் 1,33,006 கோடியும் (54%), குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்கு ₹46,899 கோடியும் அடங்கும்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. இரண்டாவது BIMSTEC பேரிடர் மேலாண்மை பயிற்சி–2020 நடத்தப்பட்ட நகரம் எது?**

அ. திம்பு

**ஆ. புவனேசுவர் ☑**

இ. கொழும்பு

ஈ. காத்மாண்டு

❖ சமீபத்தில், ஒடிசாவின் தலைநகரமான புவனேசுவரில் அம்மாநிலத்தின் முதலமைச்சர் நவீன் பட்நாயக் இரண்டாவது BIMSTEC பேரிடர் மேலாண்மை பயிற்சி–2020ஐ தொடங்கிவைத்தார். இந்தப்பயிற்சியை தேசிய பேரிடர் மீட்புப்படை (NDRF) மைய முகமையாக இருந்து நடத்துகிறது. "Response to a Cultural Heritage Site that Suffers Severe Damage in an Earthquake" & "Response to a Cultural Heritage Site that is Affected by Flooding or Storm Surge" என்பது இந்தப்பயிற்சிக்கான கருப்பொருளாகும்.

**2.ஹக்கீம் அஜ்மல் கான், மருத்துவத்தின் எந்தத் துறையில் சிறந்து விளங்கினார்?**




அ. ஹோமியோபதி

ஆ. சோவா ரிக்பா


இ. ஆயுர்வேதம்

**ஈ. யுனானி ☑**

❖ சிறந்த யுனானி மருத்துவரும் சமூக சீர்திருத்தவாதியுமான ஹக்கீம் அஜ்மல் கானின் பிறந்தநாள், ஒவ்வோர் ஆண்டும் பிப்.11 அன்று உலக யுனானி நாளாக கொண்டாடப்படுகிறது. யுனானி மருத்துவ முறையில் அறிவியல் ஆராய்ச்சியின் நிறுவனராகவும், புது தில்லியில் அமைந்துள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியாவின் நிறுவனர்களுள் ஒருவராகவும் அவர் இருந்தார்.

❖ கிரேக்கத்தில் தோன்றிய யுனானி மருத்துவமுறை, இந்தியாவில் அரேபியர்கள் மற்றும் பெர்சியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. யுனானி மருத்துவமுறைமூலம் சுகாதாரப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

**3.சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, வரும் ஏப்ரல் 1, 2020 முதல், எந்தக்கூறு 'மருந்துகளாக' கருதப்படும்?**



**அ. மருத்துவ சாதனங்கள் ☑**

ஆ. ஆயுஷ் மருந்துகள்

இ. மது

ஈ. மருந்துகளுக்கான மூலப்பொருட்கள்


❖ நாட்டில் விற்கப்படும் அனைத்து மருத்துவ சாதனங்களும் வரும் 2020 ஏப்ரல் 1 முதல் மருந்துகளாகக் கருதப்படும் என்றும், அவை 1940ஆம் ஆண்டின் மருந்துகள் & அழகுசாதனப்பொருட்கள் சட்டத்தின்கீழ்

ஒழுங்காற்றப்படும் என்றும் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் தனது அண்மைய அறிவிப்பில் கூறியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, இருபத்துமூன்று மருத்துவ சாதனங்கள் மட்டுமே மருந்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

❖ கார்டியாக் ஸ்டெண்டுகள் மற்றும் கருப்பையக சாதனங்கள் உட்பட இவற்றில் சில மட்டுமே விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. மருந்துகள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்துரையாடிய பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**4.உலக நலவாழ்வு அமைப்பின்படி, சீனாவில் பரவிய வைரஸின் அதிகாரப்பூர்வ பெயர் என்ன?**

அ. COVID-19 ☑



ஆ. CORO-19

இ. n-COR -19

ஈ. NOVEL-19

❖ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) அண்மையில் சீனாவிலிருந்து பரவிய கொடிய வைரஸ், "COVID-19" என அழைக்கப்படும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. குறிப்பிட்ட இருப்பிடங்கள், விலங்கினங்கள் அல்லது மக்கள் குழுக்கள் பற்றிய குறிப்புகளைத் தவிர்ப்பதற்காகவே அதிகாரப்பூர்வ பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெயரிடுவதற்கு முன்புவரை அந்த வைரஸுக்கு, "2019-nCoV கடுமையான சுவாசத்தொற்றுநோய்" எனத் தற்காலிகமாக பெயரிடப்பட்டிருந்தது.

❖ அதிகாரப்பூர்வமான இந்தப்பெயரில், 'CO' என்பது 'கொரோனா', 'VI' என்பது 'வைரஸ்' மற்றும் 'D' என்பது 'நோய்' என்பதையும், '19' என்பது ஆண்டையும் குறிக்கிறது.

**5.இந்தியா-அமெரிக்க வர்த்தகச்சூழலில், 'GSP' என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Globalised System of Preferences




ஆ. Generalized System of Preferences ☑

இ. Globalised System of Partners

ஈ. Generalized System of Partners

❖ ஐக்கிய அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளின் அலுவலகம், அண்மையில், இந்தியாவை ஒரு வளர்ந்த பொருளாதாரம் என வகைப்படுத்தியது. ஆனால் இது, ஐக்கிய அமெரிக்காவின் GSP சலுகைகளைப் பெறுவதற்கான தகுதி கிடையாது. பொதுமைப்படுத்தப்பட்ட அமைப்பு விருப்பத்தேர்வுகள் (**G**eneralized **S**ystem of **P**references – **GSP**) திட்டமானது வளரும் நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் ஏற்றுமதியாளர்களுக்கு, குறைந்த கட்டணத்தை வழங்குகிறது. GSPஇன்கீழ், கடந்த ஜூன் மாதம் வரை கட்டணமில்லா அணுகலை அனுபவித்த மிகப்பெரிய பயனாளி நாடாக இந்தியா உள்ளது.

**6.புதிதாக உருவாக்கப்பட்ட விண்வெளி பொதுத்துறை நிறுவனமான நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெடின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. சதீஷ் ரெட்டி

ஆ. K சிவன்

**இ. G நாராயணன் ☑**

ஈ. கஸ்தூரி ரங்கன்




❖ இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (ISRO) புதிதாக உருவாக்கப்பட்ட வணிக நிறுவனமான நியூ ஸ்பேஸ் இந்தியாவின் (NSIL) தலைவராக புகழ்பெற்ற விண்வெளி அறிவியலாளர் G நாராயணன் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இந்த நியமனத்துக்கு முன்பு, திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள ISROஇன் பிரிவான திரவ உந்துவிசை அமைப்புகள் மையத்தில் (LPSC) துணை இயக்குநராக G நாராயணன் பணியாற்றி வந்தார்.

❖ விண்வெளி சந்தையை வணிக ரீதியாக ஆராய்வதற்காக, நியூ ஸ்பேஸ் இந்தியா லிட், கடந்த ஆண்டு ISROஇன்கீழ் பொதுத்துறை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிறு செயற்கைக்கோள் செலுத்திகள் (SSLV) மீது மிகுகவனஞ்செலுத்தி, அதற்கான செலுத்திகளை தயாரிப்பதற்காக NSIL உருவாக்கப்பட்டுள்ளது.

**7. 'PehleSafety' என்பது எந்தத் தொழினுட்ப நிறுவனத்தின் இணைய பாதுகாப்பு குறித்த பரப்புரையாகும்?**

அ. பேஸ்புக்

ஆ. மைக்ரோசாப்ட்

**இ. கூகிள் ☑**

ஈ. ஆப்பிள்




❖ 'Pehle Safety' என்ற பெயரில், இணைய பாதுகாப்பு குறித்த புதிய பொதுமக்கள் பங்கேற்பு பரப்புரையை கூகிள் இந்தியா நிறுவனம் அண்மையில் அறிவித்தது. தனது பயனர்களுக்கு இணைய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தெரிவிப்பதற்காக கூகிள் இந்தியா இந்தப் பரப்புரையைத் தொடங்கியுள்ளது. பயனர் தரவின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, பாதுகாப்பு சோதனை மற்றும் கடவுச்சொல் சரிபார்ப்பு போன்ற சக்திவாய்ந்த கருவிகளையும் இது அறிமுகப்படுத்தியுள்ளது.

**8.தேசிய குளிர்கால விளையாட்டு நிகழ்வு நடைபெறவிருக்கும் குல்மார்க், எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ளது?**

அ. உத்தரகண்ட்

ஆ. அருணாச்சல பிரதேசம்

இ. சிக்கிம்

**ஈ. ஜம்மு & காஷ்மீர் ☑**



❖ குல்மார்க் ஒரு புகழ்பெற்ற பனிச்சறுக்கு விளையாட்டுத்தலமும் இந்திய யூனியன் பிரதேசமான ஜம்மு –காஷ்மீரில் அமைந்துள்ள ஒரு மலைவாழிடமுமாகும். இது, மேற்கு இமயமலையில் உள்ள பிர் பஞ்சால்

மலைத்தொடரில் அமைந்துள்ளது. மார்ச் 7 முதல் கெலோ இந்தியாவின்கீழ் ஐந்து நாள் நடைபெறவுள்ள தேசிய குளிர்கால விளையாட்டு நிகழ்வை, குல்மார்க் நகரம் நடத்தவுள்ளது. இதில், முப்பதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**9.வல்லுநர்களின் துணைகொண்டு மாணாக்கரின் ஐயங்களுக்குத் தீர்வுகாண்பதற்காக, அண்மையில், இலவச தொலைபேசி சேவையை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**

அ. ஒடிசா

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. ஹரியானா



❖ உத்தரபிரதேச மாநில அரசானது அண்மையில், பொதுத் தேர்வுகளுக்கு முன்னதாக மாணாக்கரின் ஐயங்களுக்குத் தீர்வுகாண்பதற்காக ஓர் இலவச தொலைபேசி சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. உத்தரபிரதேச மத்தியமிக் சிக்ஷ பரிஷத்தின் மூத்த அதிகாரி இதன் முக்கிய அதிகாரியாக நியமிக்கப்பட் –டுள்ளார். மாணாக்கரின் ஐயங்கள், கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு பாடங்களின் வல்லுநர்களின் துணைகொண்டு தீர்க்கப்படும்.

**10. 'We Think Digital' என்பது எந்தப் பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் டிஜிட்டல் கல்வியறிவு குறித்த திட்டமாகும்?**

அ. கூகிள்

**ஆ. பேஸ்புக் ☑**

We Think Digital
from facebook

இ. ஆப்பிள்

ஈ. அமேசான்

❖ 'We Think Digital' என்பது தொழில்நுட்ப நிறுவனமான பேஸ்புக்கின் டிஜிட்டல் கல்வியறிவு திட்டமாகும். இணையவெளியில் பாலின ஏற்றத்தாழ்வை நீக்கும் நோக்கில் கடந்த 2019ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. சமீபத்தில், தேசிய பெண்கள் ஆணையம் மற்றும் இணைய அமைதி அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து உத்தரபிரதேச மாநிலத்தில், 'We Think Digital' என்ற திட்டத்தை பேஸ்புக் அறிமுகப்படுத்தியது. இந்தியாவின் ஏழு மாநிலங்களில் கிட்டத்தட்ட 1,00,000 பெண்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.பன்னாட்டு வேளாண் மேம்பாட்டு நிதியத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

அ. நியூயார்க்

ஆ. ஜெனீவா

**இ. ரோம் ☑**

ஈ. நைரோபி

- பன்னாட்டு வேளாண் மேம்பாட்டு நிதியம் என்பது இத்தாலியின் ரோம் நகரை தலைமையிடமாகக் கொண்ட ஒரு பன்னாட்டு நிதி நிறுவனமாகும். இது, வறுமை & பசியின்மைக்கு தீர்வுகாண்பதற்கான ஐ.நா அவையின் சிறப்பு நிறுவனமாகும்.

- "Investing in sustainable food systems to end hunger by 2030 – எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் பட்டினியை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக நீடித்த உணவு முறைகளில் முதலீடு செய்தல்" என்ற கருப்பொருளில், பன்னாட்டு வேளாண் மேம்பாட்டு நிதியத்தின் ஆளுநர்கள் குழுவின் 43ஆவது அமர்வு அண்மையில் ரோமில் நடைபெற்றது. இதன் தொடக்க விழாவிற்கு, மாலிய அதிபர் இப்ராஹிம் பௌபக்கர் கெஸ்டா தலைமைதாங்கினார்.

**2.எந்தத் திட்டத்தின்கீழ், பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தூதர் முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது?**

அ. தூய்மை இந்தியா இயக்கம்

**ஆ. ஆயுஷ்மான் பாரத் ☑**

இ. போஷான் அபியான்

ஈ. கட்டுடல் இந்தியா இயக்கம்




- 'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தின்கீழ் மத்திய சுகாதார அமைச்சரும், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சரும் இணைந்து பள்ளி சுகாதார மற்றும் ஆரோக்கிய தூதர் முன்னெடுப்பைத் தொடங்கினர். இந்த முன்னெடுப்பின்கீழ், ஒவ்வொரு பள்ளியிலும் 2 ஆசிரியர்கள் நலவாழ்வு பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, "சுகாதாரம் & ஆரோக்கிய தூதர்" என்று நியமிக்கப்படுவார்கள்.

- இந்தத்திட்டம், தொடக்கத்தில் 200 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மேலும், "கட்டுடல் இந்தியா (Fit India) இயக்கம்", "சரியானதை உண்ணுங்கள் (Eat Right) பரப்புரை", போஷான் அபியான் உள்ளிட்ட பிற அரசு திட்டங்களுடன் இது இணைக்கப்படும்.

**3. 2020 பிப்ரவரி 13 அன்று அனுசரிக்கப்பட்ட, "உலக வானொலி நாளுக்கான" கருப்பொருள் என்ன?**

**அ. Radio and Diversity ☑**

ஆ. Radio across World

இ. Radio and Multilingualism

ஈ. Connecting through Air



❖ பிப்.13ஆம் தேதியை, "உலக வானொலி நாளாக" கொண்டாடுவதற்கான UNESCO உறுப்புநாடுகளின் பேரறிவிப்பு, ஐ.நா பொது அவையால் கடந்த 2013ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நடப்பாண்டு (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "வானொலி மற்றும் பன்முகத்தன்மை".

❖ வானொலியின் முக்கியத்துவம் மற்றும் தகவல் அணுகல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு, UNESCO தலைமையில் உலகெங்கும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளின்போது, "We are Radio; We are Diversity" என்ற பரப்புரையும் தொடங்கப்பட்டது.

**4.பிரதமர் வன் தன் யோஜனா என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமாகும்?**

அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. பழங்குடியினர் விவகார அமைச்சகம் ☑**

இ. புவி அறிவியல் அமைச்சகம்

ஈ. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சகம்

❖ பழங்குடியினர் விவகார அமைச்சகம், TRIFED மூலம், 2019ஆம் ஆண்டில் 'பிரதமர் வன் தன் யோஜனா' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம், வனத்தில் விளையும் பொருட்களைப் பயன்படுத்தி, பழங்குடிகளுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. தயாரிப்புகளை அடையாளக்குறியிடவும், சிப்பமாக்கவும் வன் தன் மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

❖ அண்மையில், TRIFED (இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பு) ஏற்பாடுசெய்த, "வன் தன் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு" குறித்த பயிலரங்கத்தை மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சர் ஸ்ரீ அர்ஜுன் முண்டா தொடங்கிவைத்தார்.

**5.அரசுக்கு சொந்தமான 3 பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களின் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காக அண்மையில் அவற்றுக்கு எவ்வளவு மூலதனம் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது?**



அ. ரூ. 2000 கோடி

**ஆ. ரூ. 2500 கோடி ☑**

இ. ரூ. 3000 கோடி

ஈ. ரூ. 5000 கோடி

❖ ஓரியண்டல் காப்பீட்டு நிறுவனம் (OICL), தேசிய காப்பீட்டு நிறுவனம் (NICL), யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் (UIICL) ஆகிய பொதுத்துறையைச்சேர்ந்த மூன்று காப்பீட்டு நிறுவனங்களுக்கு முதலீடு வழங்குவதற்கான ஒப்புதலை மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது.

❖ மூன்று பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களின் மோசமான நிதிநிலை மற்றும் கடனை தீர்ப்பதற்குத் தேவையான முதலீடு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு உடனடியாக ₹2500 கோடி நிதியை விடுவிக்க மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

**6.மத்திய அமைச்சரவையின் ஒப்புதலின்படி, எந்தத் தீர்ப்பாயத்தின் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வுகாண்பதற்காக, 'விவாத் சே விஸ்வாஸ்' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

அ. கடன் மீட்பு தீர்ப்பாயம் ☑

ஆ. தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம்

இ. தொலைத்தொடர்பு சிக்கல் தீர்வு & மேல்முறையீட்டு தீர்ப்பாயம்

ஈ. ஆயுதப்படைகள் தீர்ப்பாயம்




❖ வருமான வரி உள்ளிட்ட நேரடி வரிகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வுகாணும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்ட விவாத் சே விஸ்வாஸ் (சர்ச்சையிலிருந்து நம்பிக்கை) மசோதாவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இம்மசோதாவில் வருமான வரி உள்ளிட்ட நேரடி வரிகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம், உயர்நீதிமன்றங்கள், உச்சநீதிமன்றம் ஆகியவற்றில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வுகாணும் நோக்கில் வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

❖ ₹9 இலட்சம் கோடி மதிப்பிலான நேரடி வரிகளை வசூல் செய்வது தொடர்பாக பல்வேறு வழக்குகள் வெவ்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இந்த மசோதா நிறைவேற்றப்படுவதன் மூலம், நேரடி வரிகள் தொடர்பாக வழக்கு தொடுத்துள்ளோர் மார்ச்.31ஆம் தேதிக்குள் அவற்றின் மீது தீர்வு காண வழிவகை ஏற்படும். நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு மார்ச் 31ஆம் தேதிக்குள் தீர்வு காணத் தவறுபவர்களுக்கு 10% கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.

**7.உள்நாட்டு வான்பயண பாதுகாப்புப் பணியகத்தால், அண்மையில், அனைத்து வானூர்தி நிலையங்க –ளிலும் வானூர்திகளிலும் தடைசெய்யப்பட்ட தயாரிப்பு எது?**

அ. மது

ஆ. இ – சிகரெட் ☑

இ. போதை மருந்துகள்

ஈ. முகமூடிகள்



❖ அண்மையில், இந்தியாவில் உள்ள அனைத்து வானூர்தி நிலையங்கள் மற்றும் வானூர்திகளில் இ–சிகரெட்டுகள் மற்றும் அது ஒத்த தயாரிப்புகளை தடை செய்துள்ளதாக இந்தியாவின் வான்பயண பாதுகாப்பு கட்டுப்பாட்டாளரான உள்நாட்டு வான்பயண பாதுகாப்புப் பணியகம் அறிவித்தது.

❖ எந்தவொரு வானூர்தி நிலைய வளாகத்திலும் அல்லது இந்தியாவுக்கு வரும் / புறப்படும் எந்தவொரு வானூர்தியிலும் இதுபோன்ற பொருட்களை விநியோகித்தல், விற்பனை செய்தல், சேமித்தல் ஆகியவற் –றையும் அது தடை செய்துள்ளது. மின்னணு நிகோடின் விநியோக முறை (ENDS) இதில் அடங்கும் என்பதால், கடந்த ஆண்டு, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் இ–சிகரெட்டுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் இறக்குமதியை தடைசெய்தது.

**8.பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICAI) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**அ. அதுல் குமார் குப்தா ☑**

ஆ. நிஹார் நிரஞ்சன் ஜம்புசாரியா

இ. பிரபுல்லா சாஜேத்

ஈ. N D குப்தா

❖ மூத்த பட்டய கணக்காளர் அதுல் குமார் குப்தா, அண்மையில், 2020–21ஆம் ஆண்டுக்கான பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். முன்னதாக அவர், 2019–20 காலப்பகுதியில் அவ்வமைப்பின் துணைத்தலைவராக பணியாற்றிவந்தார். இவருக்குமுன் பிரபுல்லா சாஜேத் தலைவராக இருந்தார். நிஹார் நிரஞ்சன் ஜம்புசாரியா, 2020–21ஆம் ஆண்டுக்கான துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**9.அண்மையில் காலமான வெண்டெல் ரோட்ரிக்ஸ், எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?**



அ. திரைத்துறை

ஆ. வணிகம்

இ. அரசியல்

**ஈ. ஆடை வடிவமைப்பு ☑**

❖ பிரபல ஆடை வடிவமைப்பாளரான வெண்டல் ரோட்ரிக்ஸ், அண்மையில், கோவாவில் காலமானார். ஆடை வடிவமைப்பிள் பிரபலமான இவர் 'மினிமலிசத்தின் குரு' என்றும் அழைக்கப்பட்டார். நாட்டில், 'பொழுதுபோக்கிட உடைகள்' மற்றும் 'சுற்றுச்சூழலுக்குகந்த ஆடைகள்' போன்ற யோசனைகளை அறிமுகப்படுத்தியதற்காக அவர் அறியப்பட்டார். அவர், காதி இயக்கத்தின் ஊக்குவிப்பாளராகவும், இந்தியாவின் நான்காவது மிகவுயர்ந்த விருதான 'பத்மஸ்ரீ' விருதைப் பெற்றவராகவும் இருந்தார். இவர் ஒரு சமூக ஆர்வலராகவும் இருந்தார்.

**10.அண்மையச் செய்திகளில் இடம்பெற்ற அமித் பங்கல், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவராவார்?**



அ. வில்வித்தை

**ஆ. குத்துச்சண்டை ☑**

இ. மல்யுத்தம்

ஈ. டென்னிஸ்

❖ உலக குத்துச்சண்டைப் போட்டியில் வெள்ளி வென்ற அமித் பங்கல், IOC குத்துச்சண்டைப் பணிக் குழுவால் தரவரிசையில் முதலாமிடத்தில் வைக்கப்பட்டுள்ளார். அடுத்த மாதம் ஜப்பான் ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப்போட்டிகள் நடக்கவுள்ள நிலையில் இப்பெரிய கௌரவம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த 10 ஆண்டுகளில், இத்தகைய உலகளாவிய கௌரவத்தைப் பெற்ற இந்திய குத்துச்சண்டை வீரர் அமித் பங்கல்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

- கடந்த 2009ம் ஆண்டில், உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் 75 கி.கி எடைப்பிரிவில் வெண்கலம் வென்ற விஜேந்தர் சிங் இதே கௌரவத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச குத்துச்சண்டை சங்கம் தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால், ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப்போட்டி மற்றும் டோக்கியோவில் நடைபெறவுள்ள முதன்மை நிகழ்வு ஆகிய இரண்டையும் IOC பணிக்குழு நடத்தும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- வ உ சிதம்பரனார் துறைமுக பொறுப்புக்கழகத்தின் துணைத்தலைவராக இருந்த நா. வையாபுரி பணி ஓய்வு பெற்றதைத்தொடர்ந்து, அப்பதவியில், பிமல் குமார் ஜா பொறுப்பேற்றுக்கொண்டார்.
- சென்னை உள்பட 11 மாநகராட்சிகளில் நடந்தும் மிதிவண்டியிலும் பொதுமக்கள் சிரமமின்றி செல்லும் வகையில், "மாபெரும் சாலைகள்" திட்டம் செயல்படுத்தப்படும் என உள்ளாட்சித்துறை அமைச்சர் S P வேலுமணி தெரிவித்துள்ளார்.
- சென்னையில் உள்ள மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவராக (பொறுப்பு) நீதிபதி துரை ஜெயச்சந்திரன் பொறுப்பேற்றுள்ளார்.

---